சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 12.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **123/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-8 |
| சாட்சியின் பெயர் | : | ஆனந்த் |
| தந்தை பெயர் | : | கணேசன் |
| கிராமம் | : | அண்ணா நகர், |
| தாலுக்கா | : | திருத்துறைப்பூண்டி |
| தொழில் | : | கொத்தனார் |
| வயது | : | 35 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 குமார் என்பவரை தெரியும். அவர் எனது அண்ணன் ஆவார். ஆஜர் எதிரியை தெரியாது. அ.சா.1 குமார் எனது அண்ணன், அவரது இரண்டாவது மகள் நந்துதாசினி தற்கொலை செய்து கொண்டார். இதுசம்மந்தமாக போன்

மூலம் எனக்கு தகவல் சொன்னார்கள். கடந்த 19.03.2025ம் தேதி நான் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு இறந்துபோன நந்துதாசினியின் உடலை பிரேத பரிசோதனை செய்தபோது போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் பிரேத பரிசோதனை அறிக்கையில் காணப்பட்டும் சாட்சி கையெழுத்து என்னுடையதுதான் என்றும், அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u> : இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.12 18:27:39 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.